*8*

# தாவீதின் குமாரன்/ ஆபிரகாமின் குமாரன்

## (மத்தேயு 1)

*தேவன் உங்களுக்கு, இயேசுவின் வரலாற்றைக் கூறுவதற்காகப் புதிய ஏற்பாட்டை எழுதும் பணிப்பொறுப்பைக் கொடுத்திருந்தால், நீங்கள் எவ்வாறு தொடங்கியிருப்பீர்கள்? அனேகமாக நீங்கள் மத்தேயு தொடங்கிய விதத்தில் தொடங்கியிருக்க மாட்டீர்கள், அவர் நாற்பத்தி இரண்டு தலைமுறைகள் பற்றிக் கூறி முடிக்கும் பதினேழு வசனங்கள் கொண்ட பரம்பரைப் பட்டியல் (முன்னோர்களின் பட்டியல்) கொண்டு அதைத் தொடங்கினார். மத்தேயு 1:1-17 வசனங்கள் வேதாகமம் முழுவதிலும் மிகக் குறைவாக வாசிக்கப்பட்டுள்ள வேதவசனப் பகுதிகளில் ஒன்றாக உள்ளது. நம்மில் பெரும்பாலானோர் 18ம் வசனத்திற்குத் தாவிச்சென்று விடுகிறோம் மற்றும் இந்த முதல் பதினேழு வசனங்கள் அங்கு இல்லை என்பது போன்று செயல்படுகிறோம்.*

*வேதாகமரீதியான வெளிப்படுத்துதல் எல்லாவற்றின் சந்தர்ப்பப் பொருளில் காணும்போது, மத்தேயு 1ம் அதிகாரம் புதிய ஏற்பாட்டை எழுதத் தொடங்குவதற்குப் பூரணமான வழியாக உள்ளது. மத்தேயு சுவிசேஷம் புதிய ஏற்பாட்டில் முதலாவதாக இருப்பதற்குக் காரணம், அது முதலாவதாக எழுதப்பட்டது என்பதல்ல. பவுலின் நிருபங்கள் யாவையும் மத்தேயு சுவிசேஷம் எழுதப்படுவதற்கு முன்னரே எழுதப்பட்டு விட்டன. நமது புதிய ஏற்பாடானது எழுதப்பட்ட* வரிசைமுறைப்படி *அமைக்கப்படவில்லை; அது* தர்க்கப்பொருத்தமான *வரிசையில் அமைக்கப்பட்டுள்ளது. முதலாவதாக நான்கு சுவிசேஷ நூல்களும் உள்ளன, இவைகள் இயேசுவின் வரலாற்றைக் கூறுகின்றன. பின்பு இயேசுவினால் தொடங்கப் பட்ட இயக்கத்தின் வரலாற்றைக் கூறும் நடபடிகள் புத்தகம் வருகிறது. பின்பு சபையாக இருத்தல் என்பது அர்த்தப்படுத்துவது என்ன என்பதைப் பற்றிக் குறிப்புகள் தருவதற்கு, சபைகளுக்கும் தனிநபர்களுக்கும் எழுதப்பட்ட பல்வேறு நிருபங்கள் வருகின்றன. கடைசியாக, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது, இயேசுவை மகிமைப்படுத்தப்பட்ட மற்றும் வெற்றிபெற்ற தேவனுடைய ஆட்டுக்குட்டியாக, தமது மக்களைப் பரலோகத்திற்கு அழைத்துச் செல்லத் திரும்பவும் வருபவராக முன்னிறுத்துவதன் மூலம் எல்லாவற்றையும் ஒரு மாபெரும் உச்சக்காட்சிக்குக் கொண்டுவருகிறது.*

*புதிய ஏற்பாடு இந்தத் தலைமுறை அட்டவணையுடன் தொடங்குவது ஏன்? ஏனென்றால் இது பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் இடையில் ஒரு பூரணமான பாலத்தை அளிக்கிறது. மத்தேயு சுவிசேஷத்தை முதன் முதலில் வாசித்தவர்களுக்கு (அவர்கள் சந்தேகமின்றிப் பெரும்பாலும் யூதர்களாக*

இருந்தனர்), இந்தத் தலைமுறை அட்டவணையானது பெயர்களின் வெறும் பட்டியலாக மாத்திரம் இருக்கவில்லை. மாறாக, தாமஸ் G. லாங் அவர்கள் சுட்டிக்காண்பித்தபடி, இது "வரலாற்றுகளின் பாடல் திரட்டாக, ஒவ்வொரு பெயரும் நினைவுகளின் வெளி ஓட்டத்தைத் துண்டுவதாக" உள்ளது.[1] எபிரெய வேதவசனங்களைக் கற்பதில் வளர்ந்திருந்த வாசகர்களுக்கு, "ஆபிரகாம்," "போவாஸ்," "உரியா," "செருபாபேல்" மற்றும் பிற பெயர்களைக் குறிப்பிடுவதில் மாத்திரமே, அவர்களுடன் தொடர்புடைய பழைய ஏற்பாட்டு வரலாறுகளை அவர்களின் மனதிற்குக் கொண்டுவருவதாக இருந்தது. இந்த "குடும்ப மரம்" (பெயர் அட்டவணை), சுருக்கமான வடிவத்தில் குடும்ப வரலாறுகளின் சேகர ஏடு போன்ற ஒன்றாக உள்ளது - மற்றும் இந்தக் குடும்ப வரலாறு முழுவதும், இதன் உச்சக்காட்சியும் இதில் உள்ள யாவற்றின் நிறைவேற்றமுமான இயேசுவை நோக்கி வழிநடத்துவதாகக் காண்பிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் மத்தேயு 1ம் அதிகாரத்தில், தலைமுறை அட்டவணையைக் காட்டிலும் அதிகமான விஷயங்களும் உள்ளன. தலைமுறை அட்டவணையைத் தொடர்ந்து, 18 முதல் 25 வரையுள்ள வசனங்கள், இயேசுவினுடைய பிறப்பின் வரலாற்றைக் கூறுகின்றன (இந்த வியத்தகு நிகழ்வைப் பற்றிப் புதிய ஏற்பாட்டில் வேறொரு இடமான லூக்கா 2ம் அதிகாரத்துடன் சேர்ந்து, இரு விபரங்கள் மாத்திரம் உள்ளன). தலைமுறை அட்டவணையும் பிறப்பு வரலாறும் ஒன்று சேர்ந்து, மத்தேயு சுவிசேஷத்திலும் புதிய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதியிலும் கூறப்பட்ட எல்லாவற்றின் தொகுப்புரையை நமக்குக் கொடுக்கிறது.

குறிப்பாக, மத்தேயு 1ம் அதிகாரம் நமக்கு, இயேசுவைப் பற்றியும் அவர் யாராக இருக்கிறார் என்பதைப் பற்றியும் முக்கியமான சத்தியங்களைக் கூறுகிறது.

## இயேசு, இஸ்ரவேலின் மேசியா

மத்தேயு 1:1ம் வசனம், "ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசுகிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு" அன்று தொடங்குகிறது. "கிறிஸ்து" என்பது இயேசுவின் பெயரின் கடைசிப்பாகம் என்று நாம் நினைக்கும் அளவிற்கு, "இயேசு கிறிஸ்து" என்ற பெயருடன் நாம் பழக்கப்பட்டிருக்கிறோம். அது அவ்வாறு பயன்படுத்தப்பட்டிருந்தாலும், அதன் தோற்றகால விருப்பநோக்கம் முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது.

"கிறிஸ்து" என்ற பெயர், *christos* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது, "Messiah" என்பது இதற்குச் சமமான எபிரெயச் சொற்றொடராக உள்ளது. ஆகையால், "இயேசு கிறிஸ்து" என்பது ஒரு பெயர் என்பதைக் காட்டிலும் அதிகமானதாக உள்ளது; இது விசுவாசத்தின் அறிக்கையாக உள்ளது. புதிய ஏற்பாட்டின் சில மொழிபெயர்ப்புகளில் (KJV; ASV; NIV; ESV) மத்தேயு 1:1ல் "இயேசு கிறிஸ்து" என்று மாத்திரம் உள்ளது; ஆனால் மற்ற மொழிபெயர்ப்புகள் (NASB; NRSV; NLT) "இயேசு கிறிஸ்து" என்று கூறுதலானது "மேசியாவாகிய இயேசு" என்று கூறுதலாகவே உள்ளது என்பதை நமக்கு நினைவூட்டும்படி, *christos* என்பதை "மேசியா" என்று மொழிபெயர்த்துள்ளன. (16 முதல் 18 வரையிலான வசனங்களை, முதலில் "மேசியா" என்ற வார்த்தையையும் பின்பு "கிறிஸ்து" என்ற வார்த்தையையும் பயன்படுத்தி, இது எவ்வாறு மாறுபட்டு ஒலிக்கிறது என்பதைக் காண்பதற்கு, உரக்க வாசிக்க

*முயற்சி செய்யுங்கள்.)*

*"மேசியா" என்பது எதை அர்த்தப்படுத்துகிறது? நேரடியான அர்த்தத்தில் இது, "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்று அர்த்தப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் அரசர்களும் தீர்க்கதரிசிகளும் தேவனுடைய அலுவல்ரீதியான பிரதிநிதிகளாக இருப்பதற்காக, அவரது நாமத்தில் பேசுவதற்காக, அவரால் அபிஷேகம் பண்ணப்பட்டனர். "மேசியா" என்ற சொற்றொடர், 2 சாமுவேல் 7ம் அதிகாரத்தில் தாவீதின் அரியணையில் வீற்றிருந்து இஸ்ரவேல் மக்களை என்றென்றைக்கும் அரசாளுவார் என்று தாவீதுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட, நீண்ட காலம் எதிர்பார்க்கப் பட்டிருந்த, குறைவற்ற அரசருக்குப் பயன்படுத்தப்பட்டதாக இருந்தது. ஒரு விடுதலையாளர் பற்றிய இந்த நம்பிக்கை, ஏசாயா போன்ற தீர்க்கதரிசிகளால் திரும்பத் திரும்ப உரைக்கப்பட்டது, இது தேவன் ஒருநாளில் இஸ்ரவேல் மக்களுக்கு "இராஜ்யத்தைத் திரும்பக் கொடுப்பார்" என்ற வாக்குத்தத்தமாகக் கூறப்பட்டது, இதை அவர்கள் தங்களை அடக்கியாண்ட விரோதிகளைத் தோல்வியுறச் செய்யும் வாக்குத்தத்தம் என்று புரிந்துகொண்டிருந்தனர்.*

*இயேசுவானவர், ஆபிரகாம் மற்றும் தாவீது ஆகியோரின் வம்சவழியில் வந்தவராக இருந்தார் என்று காண்பிப்பதும், வாக்களிக்கப்பட்ட மேசியா என்ற வகையில் அவரது அடையாளத்தை நிலைநாட்டுவதுமே, மத்தேயு சுவிசேஷத்தில் கூறப்பட்ட தலைமுறை அட்டவணையின் நோக்கமாக உள்ளது. ஆபிரகாம் தலைமுறை வரிசையில் தாவீதிற்கு முற்பட்டவராக இருந்தாலும், ஆங்கில வேதாகமத்தில், மத்தேயு 1:1ல் தாவீதின் பெயரானது ஆபிரகாமின் பெயருக்கு முன்னதாக வருகிறது. கருத்து தெளிவானதாக உள்ளது: இயேசுவானவர், தாவீதின் வழிவந்த மேசியாவாக, என்றென்றைக்கும் அரசாளுவார் என்று தேவன் வாக்குத்தத்தம் செய்திருந்த சந்ததியாக இருக்கிறார்.*

*தாவீதுக்கும் இஸ்ரவேல் முழுவதற்கும் தேவனுடைய வாக்குத்தத்தமானது இயேசு என்ற நபரில் நிறைவேற்றப் பட்டிருந்தது என்பதே மத்தேயு சுவிசேஷத்தின் செய்தியாக உள்ளது. அதனால்தான் மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா ஆகிய சுவிசேஷங்கள் (இவைகள் "ஒப்பீட்டு" சுவிசேஷங்கள் என்று அழைக்கப்படுகின்றன), "தேவனுடைய இராஜ்யம்" பற்றிய இயேசுவின் போதனைகளை வலியுறுத்துகின்றன: இயேசு குறைவற்ற அரசராக இருக்கிறார், அவரது வருகையுடன் பூமியின் மீது தேவனுடைய ஆளுகை தொடங்கியது. "அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்" (மத்தேயு 4:17). காத்திருந்த காலம் முடிவடைந்தது. மேசியா/அரசர் வந்திருக்கிறார்! அதனால்தான் அவரது வருகையின் வரலாறு "சுவிசேஷம்" ("நற்செய்தி") என்று அழைக்கப்படுகிறது - இது தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேற்றத்தின் காலத்தினுடைய நற்செய்தியாக உள்ளது.*

## இயேசு, உலகத்தின் இரட்சகர்

*இயேசு, இஸ்ரவேலின் மேசியாவாக மாத்திரம் இருந்திருந்தால், அது யூதரல்லாத மக்களுக்குக் குறிப்பான நற்செய்தியாக இருந்திராது. இருப்பினும் அவர் மக்களின் ஒரு குழுவின் விடுதலையாளர் என்பதைக் காட்டிலும் அதிகமானவராக - இன்னும் அதிகமானவராக - இருக்கிறார் என்று மத்தேயு*

நமக்குக் கூறுகிறார். அவர் உலகத்தின் "இரட்சகராகவும்" இருக்கிறார்.

1:21ல் கர்த்தருடைய தூதர் யோசேப்பினிடத்தில், மரியாளின் குழந்தைக்கு "இயேசு" என்று அவர் பெயரிட வேண்டும், "ஏனெனில் அவர் தமது ஜனங்களின் *பாவங்களை நீக்கி* அவர்களை இரட்சிப்பார்" என்று கூறினார் (என்னால் வலியுறுத்தப்படுகிறது). "இயேசு" என்பது "கர்த்தர் இரட்சிக்கிறார்" அல்லது "கர்த்தர் இரட்சிப்பாக இருக்கிறார்" என்று அர்த்தப்படுகிற "Joshua" (அல்லது "Yehoshua") என்ற எபிரெயப் பெயரின் கிரேக்க வடிவத்தில் இருந்து வந்துள்ளது. மேசியாவுக்கு இந்தப் பெயர் தேர்ந்தெடுக்கப்பட்டது ஏன்? ஏனென்றால் அவர் "அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பவராக" இருந்தார். இயேசு, ரோம அடக்குமுறையில் இருந்து மக்களினத்தை விடுவிப்பவராக மாத்திரம் இருக்கவில்லை; அவர் ரோமாபுரியைக் காட்டிலும் அதிகமாக சாவுக்கேதுவாக ஒரு விரோதியிடத்தில் இருந்து எல்லா மக்களையும் இரட்சிப்பவராக இருந்தார்.

தலைமுறை அட்டவணையானது தன்னிலேயே இந்த இரட்சிப்பின் உலகளாவிய பண்பை (அதாவது இயேசு யூதர்களுக்கு மாத்திரமல்ல ஆனால் எல்லாப் பாவிகளுக்கும் உரியவர் என்ற கருத்தை) வலியுறுத்துகிறது. அந்த நாற்பத்தி இரண்டு தலைமுறையின் பட்டியலைக் கண்ணோக்குவதில் நமக்கு, பாவத்தின் அதிர்ச்சியூட்டக் கூடிய சில வரலாறுகள் நினைவூட்டப்படுகின்றன. தாவீது தாமே, விபசாரம், கொலை மற்றும் பொய்கூறுதல் என்ற பாவத்தில் விழுந்தவராக இருந்தார் (2 சாமுவேல் 11; 12). இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்களின் முற்பிதாவான யாக்கோபு வஞ்சிப்பவராக இருந்தார் - இவருடன் வர்த்தகம் செய்ய எவரொருவரும் ஒருக்காலும் விரும்ப மாட்டார்கள் (ஆதியாகமம் 27-31)! உலகில் வாழ்ந்தவர்களிலேயே மிகவும் ஞானமுள்ளவரான சாலொமோன், தமது பிந்திய ஆண்டுகளில் நம்ப இயலாத அளவுக்கு மதியீனரானார், அவர் அந்நியப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டு, இஸ்ரவேலில் விக்கிரக ஆராதனையை அறிமுகப்படுத்த அவர்களை அனுமதித்தார் (1 இராஜாக்கள் 11:1-8). இஸ்ரவேலின் மிகமோசமான அரசர்களில் ஒருவரான மனாசே, தேவாலயத்தின் உள்ளேயே விக்கிரக ஆராதனைக்கென்று பலிபீடங்களை கட்டச் செய்தார் (2 இராஜாக்கள் 21:1, 4-6). இருந்தபோதிலும் இவர்கள் யாவரும் இயேசுவின் குடும்ப மரத்தில் உள்ளனர், இது அவர் "உண்மையான பாவிகளை" அவர்களின் பாவங்களில் இருந்து இரட்சிக்க வந்தார் என்பதைச் சுட்டிக்காட்டும் குறிப்பாக உள்ளது. (இது, மத்தேயு இயேசுவுக்கு செயற்கையாக ஒரு "தூய" வம்சவழியைக் கொடுப்பதற்காக அதை "சுத்தப்படுத்த" வில்லை என்பதால், அவர் தலைமுறை அட்டவணையை "புனைந்துரைக்க" வில்லை என்பதையும் சுட்டிக்காட்டும் குறிப்பாக உள்ளது.)

முன்னோர்களின் அட்டவணையானது இரு பாலரையும் உள்ளடக்கியதாகவும் இருக்கிறது. இந்தப் பட்டியலில் ஐந்து பெண்களின் பெயர்கள் உள்ளன: தாமார், ராகாப், ரூத், பத்சேபாள் மற்றும் மரியாள். யூதர்களின் தலைமுறை அட்டவணையில் பெண்களின் பெயர்களை உள்ளடக்குதல் என்பது அறியப்படாததாக இருக்கவில்லை, ஆனால் அது எழுதப்படாத சட்டமாக இருக்கவில்லை. (உதாரணத்திற்கு, ஆதியாகமம் 4:17-22ஐ ஆதியாகமம் 10:1-20 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.) ஐந்து பெண்களை உள்ளடக்கியதின் மூலம்

மத்தேயு பின்வரும் கருத்தைத் தெளிவாக்கினார்; இயேசு, ஆண்கள் பெண்கள் ஆகிய இருசாராருக்கும் இரட்சகராக இருப்பதற்கென்று வந்தார். அவர், தேவனுடைய திட்டத்தை பலன்தருவதாகக் கொண்டுவருவதில் பெண்களின் இன்றியமையாத பணிப்பொறுப்புகளை ஒப்புக்கொள்ளவும் செய்தார்.

இத்துடன் கூடுதலாக, தலைமுறை அட்டவணையானது நோக்கெல்லையில் பன்னாட்டுக்கு உரியதாக இருக்கிறது, ஏனெனில் இதில் குறிப்பிடப் பட்டுள்ள ஐந்து பெண்களில் நால்வர் இஸ்ரவேலைச் சேர்ந்தவர்களாக இருக்கவில்லை. தாமார் என்பவள், யூதா தமது மகனுக்குத் திருமணம் செய்விக்கத் தேர்ந்துகொண்ட கானானியப் பெண்ணாக இருந்தாள். ராகாப், ஒரு கானானிய விபசாரியாக இருந்தாள். ரூத், இஸ்ரவேல் குடும்பத்தில் திருமணம் செய்துகொள்ளப்பட்ட ஒரு மோவாபியப் பெண்ணாக இருந்தாள். பத்சேபாளுடன் தாவீது விபசாரத்தில் ஈடுபட்டார், இவள் ஏத்தியனாகிய உரியாவின் மனைவியாக இருந்தாள், எனவே அவள் ஏத்தியப் பெண்ணாக இருந்தாள் என்பதில் சந்தேகம் இல்லை. தலைமுறை அட்டவணையில் கூட நாம், மத்தேயு சுவிசேஷத்தின் முடிவுப் பகுதியில் உள்ள "பிரதான கட்டளையின்" முன்சுவையைக் கண்டறிகிறோம்: "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், *சகல ஜாதிகளையும்* சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்" (28:19, 20அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

மீண்டுமாக, மத்தேயுவின் கருத்து தெளிவாக உள்ளது: இயேசு எல்லாருக்கும் இரட்சகராக - ஆண் அல்லது பெண், யூதர் அல்லது புறஜாதி என்ற - எல்லாரிலும் *பாவிகளான* நம் யாவருக்குமானவராக இருக்கிறார்.

## இயேசு, தேவனும் மனிதனுமானவர்

இயேசு உற்பவித்தல் மற்றும் பிறத்தல் ஆகியவற்றின் வரலாற்றை எடுத்துரைப்பதில், இயேசு யோசேப்பின் உடல்ரீதியான மகன் அல்ல என்பதை மத்தேயு வலியுத்தினார். மரியாளுக்கும் யோசேப்புக்கும் ஏற்கனவே "திருமணம் நியமிக்கப்பட்டு" இருந்தாலும் (திருமணம் செய்துகொள்ளலாம் என்று உறுதி செய்தல்), "அவர்கள் கூடிவரும் முன்பே" - அதாவது, அவர்களுக்குள் உடல் உறவு நிகழ்வதற்கு முன்பே - மரியாள் கர்ப்பமானாள் (1:18). 25ம் வசனமானது, "அவன் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து," என்று வலியுறுத்துகிறது. மேலும் மரியாள் பரிசுத்த ஆவியானவரின் செயலினால்தான் கர்ப்பமானாள் என்று மத்தேயு இருமுறை கூறுகிறார் (வசனங்கள் 18, 20), மற்றும் அவள் ஒரு கன்னிப்பெண்ணாக இருந்தாள் என்று 23ம் வசனம் குறிப்பாகக் கூறுகிறது. (இயேசு யோசேப்பின் உடல்ரீதியான மகன் அல்ல என்ற உண்மையானது தலைமுறை அட்டவணையின் சட்டப் பூர்வப்பண்பைப் பாதிப்பதில்லை. தத்து எடுக்கப்பட்ட ஒரு மகன் தன்னைத் தத்தெடுத்த தந்தைக்குச் சட்டப்பூர்வமான வாரிசு ஆகிறார்.) மத்தேயு சுவிசேஷத்தின்படி, இயேசுவின் உற்பவமும் பிறப்பும், தீர்க்கதரிசியான ஏசாயாவின் மூலமாகக் கர்த்தர் உரைத்திருந்ததை "நிறைவேற்றம்" அடையச் செய்வதற்காக, இந்த அசாதாரண முறையில் நடைபெற்றன: "இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார்

என்று அர்த்தமாம்" (ஏசாயா 7:14). வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், தேவன் தமது குமாரனைத் தெய்வீகமானவராகவும் மனுஷீகமானவராகவும் இந்த உலகத்திற்குக் கொண்டு வருவதற்கு இவ்வழியைத் தேர்ந்துகொண்டார். இயேசு 100 சதவிகிதம் மனிதராகவும் 100 சதவிகிதம் தேவனாகவும் இருந்தார் ஆனால் அவர் "பாதியும் பாதியுமாக" அல்லது சில தெய்வீகப் பண்புகளைக் கொண்ட ஒரு மனிதராக இருக்கவில்லை - என்று புதிய ஏற்பாடு தொடர்ந்து அறிவிக்கிறது. எல்லைக்கு உட்பட்ட நமது சிந்தைகளுக்கு, அது கணக்கில் அடங்குவது இல்லை, ஆனால் அது தேவனுடைய இயல்பின் அற்புதத்தினுடைய ஒரு பகுதியாக உள்ளது.

இயேசு, வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் வாழ்ந்த ஒரு உண்மையான மனிதராக இருந்தார் மற்றும் அவர் குறிப்பிட்ட மனித முன்னோர்களைக் கொண்டிருந்தார் என்று வலியுறுத்துதல், இந்தத் தலைமுறை அட்டவணையின் ஒரு செயல்விளைவாக உள்ளது. (இயேசுவை அவரது வரலாற்று அமைவில் அமைத்தல் மீதான லூக்காவின் வலியுறுத்தத்திற்கு லூக்கா 3:1, 2ஐக் காணவும்.) இந்த எளிய உண்மையானது, இயேசு என்பவர் ஒரு கருத்தாக அல்லது உண்மையான வரலாற்று உருவம் என்பதைக் காட்டிலும் அதிகமாக ஒரு உணர்வாக இருக்கிறார் என்று நம்புகிற பல மக்கள் அறியாத வகையில் தப்புகிறது. புதிய ஏற்பாடு, "ஒரு காலத்தில் இயேசு என்று பெயர்கொண்ட மனிதர் ஒருவர் இருந்தார்" என்று தொடங்குவதில்லை. நாம் புனைகதைகள் அல்லது கற்பனைக் கதைகள் பற்றிப் பேசுவதில்லை; நாம், தேவனுடைய முற்றிலும் மனிதவடிவிலான குமாரனைப் பற்றிப் பேசுகிறோம்.

அதே வேளையில், இயேசு முற்றிலும் தேவனாக இருக்கிறார். அவரது சீஷர்களில் மூவர், மறுரூப நிகழ்வில் அந்த உண்மையை நேரடியாகக் காணக்கூடிய சிலாக்கியத்தைப் பெற்றனர் (மத்தேயு 17:1-8). பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோர் இயேசுவுடன் மலையின் மீது ஏறிச்சென்றனர், அவரை அவரது முழுமையான தெய்வீக மகிமையில் அவர்கள் காணக்கூடும்படிக்கு, அவர்களின் கண்களுக்கு முன்பாகவே அவர் மாற்றம் அடைந்தார் ("மறுரூபப்பட்டார்"). மோசேயும் எலியாவும் அவருடன் தோன்றினர், அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு கூடாரத்தைக் கட்டப் பேதுரு விரும்பியபோது, அந்தக் காட்சியானது ஒரு மேகத்தினால் நிழலிடப்பட்டது. ஒரு குரல் (இது தேவனுடையது என்பது தெளிவு) பேசி, "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள்" என்று உரைத்தது. இந்த இடம் வரையிலும், அவர்கள் இயேசுவை ஒரு மனிதராக மாத்திரமே, மிக விசேஷித்த வகையிலான ஒரு மனிதராக மாத்திரமே கண்டிருந்தனர். இந்த நிகழ்வில் அவர்கள் அவரை ஒரு மனிதர் என்பதைக் காட்டிலும் மிகவும் மேலானவராகக் கண்டனர்; மாம்சத்தில் வந்த தேவகுமாரனாக இருந்தார், பவுல் பிற்பாடு எடுத்துரைத்தபடி (கொலோசெயர் 1:19; 2:9) அவர் தெய்வீக இயல்பில் முழுவதும் பங்கேற்றவராக இருந்தார்.

தேவனுடைய தனிச்சிறப்பான மகன் என்ற வகையில், இயேசு கவனமிக்க திட்டமிடுதல் மற்றும் தயாரிப்பு ஆகியவற்றின் விளைவாக உலகத்திற்கு வந்தார், இது மத்தேயு 1 மற்றும் 2 ஆகிய இரு அதிகாரங்களிலும் வலியுறுத்தப்படுகிறது. அவரது வருகையானது எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பே ஏசாயா தீர்க்கதரிசியினால் முன்னுரைக்கப் பட்டிருந்தது (ஏசாயா 7:14; 9:1-7). மத்தேயு

*1:21, 25ன்படி, அவரது பெயர்கூட தெய்வீகத்துவமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டது. 2ம் அதிகாரத்தில், அவர் பச்சிளம் குழந்தையாக இருந்தபோது பெற்றுக்கொண்ட தெய்வீகப் பாதுகாப்புப் பற்றிய பல குறிப்புகளும் அவரது வளர்ப்புத் தந்தைக்குத் தரப்பட்ட வழிகாட்டுதல்களும் உள்ளன. குழந்தை இயேசுவைக் கொல்வதற்கு ஏரோது தீட்டிய கொலைத்திட்டம் அவரைப் பிடிப்பதற்கு முன்னதாக, ஏரோதிடம் திரும்பிச் செல்ல வேண்டாம் என்று ஞானிகளும் கனவில் எச்சரிக்கப்பட்டனர் (இது தெய்வீகத் தூண்டுதல் என்பது தெளிவு), இல்லையென்றால் அவர்கள் புதிய அரசர் எங்கிருக்கிறார் என்று கூறும்படி நிர்ப்பந்திக்க பட்டிருப்பர் (2:12). அதேபோன்று யோசேப்பும் தமது குடும்பத்தைக் கூட்டிக்கொண்டு எகிப்திற்கு ஓடிப்போகும்படி ஒரு தூதனால் கனவில் எச்சரிக்கப்பட்டார் (2:13-15). ஏரோதுவின் மரணத்தைத் தொடர்ந்து, ஏரோதுவின் மகன் அர்க்கெலாயு ஆண்டுகொண்டிருந்த யூதேயாவின் பகுதிக்குச் செல்லாமல், இஸ்ரவேல் நாட்டிற்குத் திரும்பும்படி யோசேப்பு மீண்டும் ஒரு தூதனால் அறிவுறுத்தப்பட்டார்.*

*தேவனுடைய குமாரன் ஒரு மனித வடிவில் இந்த பூமிக்கு வந்தார், அவர் நாம் யாவரும் செய்கிறபடி இருப்பின் தமது வட்டாரத்திற்குள் - ஒரு பச்சிளம் குழந்தையாக - பிரவேசித்தார். உதவியற்ற அந்த நிலையிலும்கூட, அவர் உலகத்தின் பாவங்களுக்காகத் தமது ஜீவனைப் பிணையமாகக் கொடுக்கக்கூடும் வரையில் - இது தேவனும் மனிதருமான இயேசு மாத்திரமே செய்யக்கூடிய செயலாகும் - அவர் தமது பிதாவினால் கவனிக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டார்.*

*மத்தேயு சுவிசேஷத்தின் தொடக்க வசனங்கள், இஸ்ரவேலின் வளமான மற்றும் விரிவான வரலாற்றின் நிறைவான நிறைவேற்றமாக இயேசு இருக்கிறார் என்று நமக்குக் காண்பிக்கும்படிக்கு, அவ்வரலாற்றைப் பற்றிய விரைவான ஒரு ஆய்வினூடே நம்மை எடுத்துச் செல்கின்றன.*

## *முடிவுரை*

*நமக்கு வெறுமனே ஒரு வரலாற்றுப் பாடத்தைக் கொடுத்தல் என்பது (மத்தேயு) சுவிசேஷ எழுத்தாளரின் நோக்கமாக இருக்கவில்லை. அவர் நமது மேசியாவைப் பற்றி, நமது இரட்சகரைப் பற்றி, மாம்சத்தில் வந்த <u>நமது</u> தேவனைப் பற்றி நமக்குக் கூற விரும்பினார். இது நம்மில் எவரும் புறக்கணிக்க கூடாத செய்தியாக உள்ளது, ஏனெனில் பாவிகளின் நீண்ட வரிசையில் நாமும் நிற்கிறோம். நம் யாவருக்கும் மீட்பு, பாவமன்னிப்பு தேவைப்படுகிறது, மற்றும் அதன் முழுமையை இயேசு மாத்திரமே தர முடியும்.*

*மத்தேயு சுவிசேஷம் (மற்றும் புதிய ஏற்பாடு முழுமையும்), இயேசு என்ற பெயர்கொண்ட மனிதரைப் பற்றிய நேர்த்தியான வரலாறு என்பதைக் காட்டிலும் அதிகமானதாக உள்ளது. இது விசுவாசித்து கீழ்ப்படிந்து மீட்பைக் கண்டடைவதற்கான ஒரு அழைப்பாக உள்ளது. இது நாம் யாவரும் கேட்க அவசியமான நற்செய்தியாக உள்ளது.*

---

*குறிப்புகள்*

[1]Thomas G. Long, *Matthew,* Westminster Bible Companion (Louisville: Westminster John Knox Press, 1997), 8.

# மத்தேயு மற்றும் லூக்கா சுவிசேஷங்களில் உள்ள (இயேசுவின்) பிறப்பின் வரலாறு

*இயேசுவின் பிறப்புப் பற்றி நமக்கு புதிய ஏற்பாட்டில் இரு பதிவுகள் மாத்திரமே இருப்பதால் (மத்தேயு 1; 2; லூக்கா 1; 2), இவை இரண்டையுமே கண்ணோக்குதல், இவை எவ்வாறு ஒன்றுபடுகின்றன மற்றும் இவை எவ்வாறு வேறுபடுகின்றன என்பதைப் பற்றி நமக்கு அறிவுறுத்துவதாக இருக்கிறது.*

*இயேசுவின் பிறப்பு பற்றிய வரலாற்றைக் கூறுவதில் மத்தேயு, யோசேப்பின் மீதும் அவருடன் தேவன் கொண்ட செய்தித்தொடர்பின் மீதும், மரியாளின் கர்ப்பம் பற்றி அவர் நினைத்தவற்றின் மீதும் அதிகம் கவனம் குவிக்கிறார். லுக்காவோ, மரியாளின் கண்ணோக்கக் கருத்தில் இருந்து இந்த வரலாற்றைக் கூறுகிறார்: யோசேப்புக்குத் தூதன் தரிசனமானதைப் பற்றியல்ல, ஆனால் மரியாளுக்குத் தூதன் தரிசனமானதைப் பற்றியும், அவளது ஐயம் நிறைந்த கவலை பற்றியும் தேவன் அவளுக்கென்று நியமிக்க பணிப்பொறுப்பை அவள் உண்மைநிறைவுடன் ஏற்றுக்கொண்டது பற்றியும் அவள் எலிசபெத்தைச் சந்திக்கச் சென்றது பற்றியும் அவர் எடுத்துரைக்கிறார்.*

*மத்தேயு சுவிசேஷத்தில், ஞானிகள்தாம் புதிதாகப் பிறந்திருந்த அரசரை ஆராதிக்க முதலில் வந்தவர்களாக இருந்தனர், இவர்களின் விலையுயர்ந்த வெகுமதிகள் இவர்கள் செல்வந்தர்களாக இருந்தனர் என்று கருத்துத் தெரிவிக்கின்றன. இருப்பினும் லூக்கா சுவிசேஷத்தில், இயேசுவின் பிறப்பு, சிறுமையான மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்பட்டது.*

*மத்தேயு சுவிசேஷம் இயேசுவின் வம்சவழியை ஆபிரகாமில் இருந்து தொடங்கும் ஒரு தலைமுறை அட்டவணையைக் கொண்டு தொடங்குவது போல், லூக்கா சுவிசேஷத்திலும் ஒரு தலைமுறை அட்டவணை உள்ளது (லூக்கா 3:23-38). ஆனால் லூக்கா தரும் தலைமுறை அட்டவணை, இயேசுவில் தொடங்கி தலைமுறை வரிசைகளின் பின்னோக்கிச் செல்வதாக உள்ளது. இந்த அட்டவணை ஆபிரகாமுடன் நின்றுவிடுவதில்லை; இது இயேசுவின் முன்சந்ததிகளை ஆதாம் மற்றும் தேவன் வரையிலும் பின்னோக்கிச் சென்று உரைப்பதாக உள்ளது. உலகளாவிய இரட்சகர் என்ற வகையில் இயேசுவின் பணிப்பொறுப்பு இருந்தது என்பது லூக்கா சுவிசேஷத்தின் முதன்மை ஆய்வுக் கருத்துக்களில் ஒன்றாக இருந்தபடியால், அவர் இயேசுவை இஸ்ரவேல் இனத்தோடு மாத்திரமல்ல, ஆனால் மனிதகுலம் முழுமையுடன் அடையாளப்படுத்துவதாகக் காணப்படுகிறது. இரு தலைமுறை அட்டவணைகளும், பொதுவாகக் கூறும் தலைமுறைகளிலும் கூட, மிகச்சரியாக ஒன்றுபோல் இருப்பது இல்லை. இவற்றில் எதுவும், இவ்விரு விபரங்களில் ஒன்று தவறானது என்று கருத்துத் தெரிவிப்பது இல்லை - இவ்விரு எழுத்தாளர்களும், நடந்தது என்ன என்பதை வலியுறுத்த வேறுபட்ட அம்சங்களை தேர்ந்துகொண்டனர் என்பது மாத்திரமே உண்மையாகும்.*

*மத்தேயு சுவிசேஷத்தில் இருந்து லூக்கா சுவிசேஷத்தின் இரு விபரங்கள் அதைத் தனிப்படப் பிரித்து வைக்கின்றன: யோவான் ஸ்நானகனின் பிறப்பு பற்றிய விபரங்கள் லூக்கா சுவிசேஷத்தில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளன, இது ஒன்று மாத்திரமே இயேசுவின் பிள்ளைப் பருவத்தில் இருந்து ஒரு நிகழ்வை விவரிப்பதாக உள்ளது: அவர் பன்னிரெண்டு வயதில் தேவாலயத்திற்குச் சென்ற நிகழ்வு (லுக்கா 2:41-52).*

# வேதவசனத்தின் “நிறைவேற்றம்”

*ஒரு வேதவசனம் “நிறைவேற்றப்பட்டுள்ளது” என்று நாம் வாசிக்கையில், மேசியா பிறக்க இருந்த இடம் பற்றிய மீகா 5:2ன் முன்னுரைத்தல் (மத்தேயு 2:3-6) போன்று, வழக்கமாக நாம், ஒரு முன்னுரைத்தல் “உண்மையானது” - யாரோ ஒருவர் இவ்வாறு நடக்கும் என்று கூறிய வண்ணமே அது நடந்தது - என்பதைப் பற்றி நினைக்கின்றோம். இருப்பினும் வேதவசனம் “நிறைவேறியது” என்ற கருத்தானது இதைக்காட்டிலும் அதிகம் எளிதற்றதாக உள்ளது.*

*வேதவசனத்தை, அதன் விருப்ப நோக்கமான அர்த்தம் “முழுவதும் நிறைந்திருத்தல்” என்று நினைத்தல் என்பது, “நிறைவேற்றம்” என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்பதை நினைவில் வைக்க ஒரு சுலபமான வழியாக உள்ளது. உதாரணமாக, மரியாளிடத்தில் இயேசு பிறந்தது, ஏசாயா 7:14ஐ “நிறைவேற்றியது” என்று மத்தேயு எழுதும்போது, ஏசாயாவினால் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்ட பிறப்பு ஆகாஸ் அரசருக்கு ஒரு அடையாளமாக இருக்கும் என்பது தேவன் தமது சிந்தையில் கொண்டிருந்த திட்டத்தின் ஒருபகுதியாக மாத்திரம் இருந்தது என்று அவர் அர்த்தப்படுத்தினார். “மரியாள்” என்ற பெயருடைய ஒரு கன்னிப் பெண்ணுக்கு இயேசு பிறத்தல் என்பதே உண்மையான வரலாற்றின் நிறைவான பகுதியாக இருந்தது.*

*சிலவேளைகளில், “நிறைவேற்றப்” பட்டுள்ளது என்று கூறப்படும் பழைய ஏற்பாட்டு வசனப்பகுதி, புதிய ஏற்பாட்டு எழுத்தாளரால் தரப்படும் நிறைவான அர்த்தத்தைச் சுட்டிக்காண்பிப்பதாகக் காணப்படுவதில்லை. இதற்கு மத்தேயு 2:13-15 ஒரு உதாரணமாக உள்ளது, இதில் புதிதாகப் பிறந்த அரசரை ஏரோது கொல்வதில் இருந்து தவிர்ப்பதற்காக யோசேப்பு எகிப்துக்கு ஓடிப்போகுதல் பற்றிக் கூறப்படுகிறது. பிற்பாடு இந்தக் குடும்பம் பாலஸ்தீனத்திற்குத் திரும்பியது. மத்தேயு “எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன் என்று, தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தரால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது” என்று எழுதினார். ஓசியா 11:1ம் வசனம் இங்கு மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ளது. இதன் தோற்றக்காலச் சந்தர்ப்பப் பொருளில் இது, தேவன் தமது மக்களை எகிப்திய அடிமைத்தளையிலிருந்து விடுவித்து அவர்கள் பயணமான வனாந்திர யாத்திரையைப் பற்றிப் பேசியது. இருப்பினும் மத்தேயுவைப் பொறுத்த மட்டில், இந்த நிகழ்வு, தேவனுடைய மாபெரும் மகனான இயேசுவை எகிப்தில் இருந்து அழைத்த நிகழ்வின் முன்நிழலிடுதலாக இருந்தது.*

*புதிய ஏற்பாட்டில் நாம் இந்த “நிறைவேற்றம் பெற்ற” வசனப்பகுதிகளை எதிர்கொள்ளுகையில், தேவனுடைய வசனம் பன்முகப் பண்புடையது மற்றும் அது, இயேசு யார் என்பதையும் அவர் செய்தது என்ற என்பதையும் வெளிப்படுத்துவதற்குப் பல வழிகளைப் பயன்படுத்துகிறது என்பதையும் நாம் புரிந்து கொள்வதற்கு ஏவுதல் பெற்ற எழுத்தாளர் நமக்கு உதவுகிறார் என்பதை நாம் நினைவில் வைப்போமாக.*